**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

மனு எண். எம்.சி.ஓ.பி. 21/2016

PW - 2

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | நந்தகுமார் |
| த.பெ. | பொன்னுச்சாமி |
| வயது | 32 |
| முகவரி | நல்லட்டிபாளையம், கிணத்துக்கடவு |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மசாஆ - 18 எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணை**

மைனர் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி வந்தது என கேட்டால் அவருடைய தகப்பனார் மோகன் ஓட்டிவந்தார். மோகன் இந்த வழக்கில் 1 ம் மனுதாரராக உள்ளார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் ஊருக்கும்

மனுதாரர் குடியிருக்கும் ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என கேட்டால் 8 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். மனுதாரர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த மோகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது எவ்வாறு தெரியும் என கேட்டால் 1ம் எதிர்மனுதாரர் கூறிய வகையில் தெரியும் ஆவணத்தை பார்க்கவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் தான் கவனக்குறைவாக ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டது என்றால் அது சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. மனுதாரரின் அம்மா அழைத்தன் பேரில் சாட்சி அளிக்க வந்துள்ளேன். குற்றவியல் நீதிமன்றத்தில் இந்த விபத்தை பொறுத்து சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் என்னை விசாரிக்காததற்கு காரணம் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரருக்கு ஆதரவாக அதிக இழப்பீடு பெற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் மீது தான் கவனக்குறைவாக உள்ளதாக சொல்லி அவர் மீது தான் முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் போது போலிசார் விசாரித்து தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று

சொன்னால் சரிதான், இறந்து போன அருண் தான் விபத்திற்கு காரணம். போலிசார் விசாரித்த போது நான் மேற்கண்ட விவரத்தை கூறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் மனுதாரருக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் இந்த விபத்தில் சம்மந்தப்பட வில்லை என்பதால் 3, 4 எதிர்மனுதாரருக்குகெதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல,

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் 4ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி